திரு. ரங்கநாதன் மீது நான் நடவடிக்கை எடுத்து இருந்தேன்; அதன் பின்னர், அவர் இல்லாமலேயே அவை நடவடிக்கைகளில் கேள்வி நேரத்தில், மற்ற மானியக் கோரிக்கைகளில் 2, 3 நாட்கள் அவர்கள் அமைதியாகக் கலந்துகொண்டதற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கேட்டுக்கொண்டு, அவர்களுக்கு அளித்த தண்டனையை ரத்து செய்து, திரும்பவும் அழைத்தேன். எனவே, அத்தகைய பெருந்தன்மையோடு, அவர்கள் ஜனநாயகக் கடமை ஆற்றட்டும் என்று கேட்டுக்கொள்கிற நிலைமையிலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கிற நிலைமையிலேதான் பேரவைத் தலைவரும் நடந்து வந்து இருக்கிறேன். எனவே, அவர்களை ஜனநாயகக் கடமையை ஆற்றவிடாமல் யாரும் தடுக்கவில்லை. ஆனால், ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும் என்று இருக்கிற சில உறுப்பினர்களை அரசியல் காரணத்திற்காக சிலர் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் இங்கே நடக்கிற நடைமுறை என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. எனவே, அவையினரும் நாட்டினரும் தெரிந்து கொள்ளட்டும் என்பதற்காகவே இதனைத் தெரிவிக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

(அ) பேராவூரணி தொகுதி இடையாத்தி நெடுஞ்சாலையின் குறுக்கே கல்லணைக் கால்வாயில் அபாயகரமான நிலையில் உள்ள பாலத்தைப் பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதி, இடையாத்தி நெடுஞ்சாலையின் குறுக்கே கல்லணைக் கால்வாயில் உள்ள பாலம் உடைந்து அபாயகரமான நிலையில் இருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

1994 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை

பேராவூரணி தொகுதி, இடையாத்தி நெடுஞ்சாலையின் குறுக்கே கல்லணைக் கால்வாயில் உள்ள பாலம் நீண்ட நாட்களுக்கு முன்னர் பொதுப்பணித் துறையினரால் கட்டப்பட்ட 3 கண்களைக் கொண்ட 18.60 மீ. நீர்வழிப் பாதையுடைய குறுகிய வலுவிழந்த பாலமாகும். இப்பாலத்தில் ஏற்பட்ட பழுதுகள் ரூ. 2.00 லட்சம் மதிப்பில் கின்னட்டிங் முறையில் சீர் செய்யப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகின்றது.

(ஆ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் போளூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. தா. வேடியப்பன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. தா. வேடியப்பன்.

***திரு. தா. வேடியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் போளூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க மாவட்ட வளர்ச்சி மன்றம் மூலம் பரிந்துரை செய்தும் இன்னும் அமைக்கப்படாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்களை உள்ளடக்கிய முந்தைய ஒருங்கிணைந்த வட ஆற்காடு மாவட்டத்தில் மூன்றாவது பால் பெருக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது திருவண்ணாமலையில் ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவுடன் ஒரு பால் குளிரூட்டும் நிலையம்